1979 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்

(அ) ஆம்.

(ஆ) விரைவில் வேலையை முடித்துக் கொடுக்கும்படி ஒப்பந்தக்காரரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இரண்டு மாதங்களில் முடிவுறும்.

தென்னார்காடு மாவட்டத்தில் சிறிய பேருந்துகள்.

*வினா எண் 351—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன், திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்காடு மாவட்டத்தில் சிறிய பேருந்து வழித் தடங்கள் இதுவரை யாருக்காவது அளிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) எத்தனை வழித் தடங்கள் நடப்பாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம். அளிக்கப்பட்டுள்ளது. 1977-ம் ஆண்டிற்கு முன் 14 வழித் தடங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது. அவற்றில் தற்போது 9 வழித் தடங்களில் சிறிய பேருந்து வாகனங்கள் (ஜீப் வண்டிகள்) ஓடிக் கொண்டு இருக்கின்றன. மீதி 5 வழித் தடங்களில் ஓடிய சிறிய பேருந்து வாகனங்கள் பெரிய பேருந்து வாகனங்களாக மாற்றப்பட்டுள்ளன.

(ஆ) நடப்பு ஆண்டில், 20 வழித் தடங்களில் சிறிய பேருந்து வாகனங்கள் ஓட்டுவதற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 10 சிறிய பேருந்துகள் (ஜீப் வண்டிகள்) ஓட ஆரம்பித்துள்ளன. மீதி 10 வழித் தடங்களில் சிறிய பேருந்து வாகனங்கள் விரைவில் உரிமையாளர்களால் விடப்படும்.

*வினா எண் 352—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராமங்களை இணைக்க மினி பஸ் விடும் திட்டப்படி சங்கராபுரம் தொகுதியில் எந்தெந்த கிராமங்களுக்கு மினி பஸ் விடும் உத்தேசம் உள்ளது ?

(ஆ) அதன் விபரம் என்ன ?